# தமிழேந்தி கண்ட தமிழீழம்.

தமிழ் எமது தாய் மொழி. தமிழீழம் எமது தாய்நாடு. தற்போது வாழும் நாட்டின் மொழியையும், தாய் மொழியையும் பிழையறப் பேசவும் எழுதவும் கற்றிருந்தான் தமிழேந்தி. அவன் தோழன் புகழோவியன் யாழ்ப்பாணம் வருமாறு அழைக்கவே இந்த விடுமுறைக்கு அப்பா, அம்மா, தங்கையோடு தமிழீழம் சென்றான்.

அங்கு தமிழே மூச்சாக தமிழோடு இயைந்த வாழ்வு அவனை வியக்க வைத்தது. ஈழத்தின் இயற்கை அழகு ஆழ்மனதை மகிழ்வித்தது. மாம்பழம், வாழைப்பழம் இனித்தது. மழை பொழிந்து வழி நீர் நிறைந்திருந்ததும், மரத்தின் விழுதைப் பற்றிய சிறுவர் கீழே விழாது ஆடியதும், அடுத்த வீட்டுக் கிழவியிடம் கூழ் வாங்கிக் குடித்ததும் மறக்க முடியாதிருந்தது. மறுபுறம் புகழோடு இருந்த ஊர்மனை அழிந்து கிடந்ததும், மாவீரர் சமாதியை உழுது போட்டதும் மனதைப் பிசைந்தது. ஆயினும் மாவீரர் வீழாது மீண்டும் எழுவர் என்று தோழன் தேற்றினான்.

இயற்கை எழில் கொஞ்சிக் கிடந்த வடக்கையும் கிழக்கையும் சுற்றிப் பார்த்தான் தமிழேந்தி. முத்தமிழும் முகிழ்த்துக் கிடந்த ஈழபூமியை எதிரி அழித்திருந்தான். குண்டு விழுந்து கிராமம் கிழிந்து கிடந்தது. இவற்றைவிட கடந்த மார்கழி மாதம் ஆழி பொங்கி நிகழ்த்திய அனர்த்தம் கரையோர பூமியை அழித்துப் போனது. போர் ஓய்வுக்குப் பின் தழைத்த வாழ்வு மறுபடி சிதைந்து போனது. அனைத்தையும் இழந்தனர் எம்மவர். குழந்தைக் காப்பகத்தையும் இரக்கமற்ற தண்ணீர் இழுத்துப் போனது.

வீழ்ந்த தேசம் மீண்டும் எழ வேண்டும். அழிவின் விளிம்பு வந்தும் வாழ்வான் தமிழன் என்று நினைத்துக் கொண்டே விமானம் ஏறினான் தமிழேந்தி. " வாழீர் தோழரே அழிவை உதைத்து" என்ற கவிவரி நினைவுக்கு வர கீழே பார்த்தான். நெஞ்சு நெகிழ்ந்தது.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |

# ல,ள,ழ

## வேறுபாடு

–மாணவர்கள் எழுத்துக்களை இனங்கண்டு உச்சரிப்பு வேறுபாட்டை அறிவதற்கான ஒரு முயற்சி.



ல நுனி நாக்கு மடிந்து முன் பற்களுக்கு அருகாக அண்ணத்தைத் தொடும்.



ள நுனி நாக்கு மடிந்து அண்ணத்தை நடுவாக தொடும்.



ழ நுனி நாக்கு நன்றாக மேல்மடிந்து அண்ணத்தின் பின் பகுதியை தொடும்.

அன்னைபூபதி தமிழ்க் கலைக்கூடம்

நோர்வே

ல ள ழ

தொகுப்பு: சிவதாஸ் சிவபாலசிங்கம்

# பாடலின் அருமை அறியா மேய்ப்பன்.

புலோலி என்ற ஊரிலிருந்து புல்லுமலை என்ற ஊருக்கு சென்றுகொண்டிருந்தான் மல்லீஸ்வரன் என்ற பாடகன். போகும் பாதையில் முல்லை மலர், மல்லிகை மலர் என்பன பூத்துக் குலுங்கின. அருகிலே ஒருவன் மாடு மேய்த்துக் கொண்டிருந்தான். அவற்றில் கட்டியிருந்த மணி கலீர்...கலீர் என ஒலித்துக்கொண்டிருந்தது.

நடந்ததனால் சலிப்படைந்த பாடகன் அருகிலேயிருந்த மரத்தடியில் அமர்ந்தான். மாடு மேய்ப்பவனைப் பார்த்த அவன் `நாம் பாடலொன்றை பாடி இவனை குதூகலிக்கவைப்போம். இவன் தரும் பசும்பாலைக் குடித்து விட்டு அலுப்பு நீங்கி செல்லலாம்` என்று நினைத்தான்.

“பாலூட்டி தாலாட்டும் பசுவல்லோ கண்டேன்...” என்று மாடு மேய்ப்பவனை பார்த்து ஆலாபனை செய்து நீண்டநேரம் பாடினான். பாடலை கேட்டுக்கொண்டிருந்த மாடுமேய்ப்பவன் கண்ணில் நீர் வடிந்தது. பாடலை நிறுத்திய பாடகன், “ எதற்காக கண்ணீர் விடுகிறாய்? பாடலோடு ஒன்றிவிட்டாயா? ” என்று கேட்டான்.

“ உமக்கு கை கால் நன்றாக இருக்கிறது, வயதாகியும் விடவில்லை. நான் எப்படிச் சொல்ல ” என்று மீண்டும் கண்ணீர்விட்டான். மல்லீஸ்வரனுக்கு ஒன்றும் புரியவில்லை. “ என்ன ஆனாலும் தயங்காமல் சொல்லு ” என்றான்.

“ போன வாரம் இப்படித்தான் எமது ஊரிலே ஒரு வயோதிபன் நான்கு மணி நேரம் ஓயாமல் கத்திக்கொண்டிருந்தான். அதனால் தலை வீங்கி செத்தான். இன்றும் பகலெல்லாம் நீரும் இப்படியே கத்தினால் அந்த வயோதியனைப் போல இறந்துவிடுவீர்” என்று சொன்னான்.

“பாடலொன்றின் அருமை புரியாத கல்லாதவனிடம் பாடமுயன்றேனே எனக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்” என்று சொல்லிக்கொண்டே பாடகன் புல்லுமலைக்கு புறப்பட்டான்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |

# சோளம் விதைத்த முட்டாள்

வள்ளுவன் கள்ளிக்காட்டு கிராமத்தை சேர்ந்தவன். அவன் தங்கை வள்ளி. இருவரும் பள்ளி சென்று வருபவர்கள். ஒரு நாள் பளையில் உள்ள மாமி கோமளம் வீட்டுக்கு சென்றார்கள்.

மருமக்கள் சாப்பிடுவதற்காக உள்ளே இருந்து வறுத்த சோளப் பொரியை கொண்டு வந்தாள் அவள். “ எங்களின் குளக்கரை முள்ளுக் கள்ளிச் செடிகளை வெட்டி விளைந்த சோளம் இது, கிள்ளிச் சாப்பிட்டுப் பாருங்கள்” என்று கொடுத்தாள் அவள்.

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசத்தெரியாத அப்பாவியாயும் முட்டாளாயும் இருந்தான் வள்ளுவன். அவன் வள்ளியிடம், “ சோளம் மிகவும் நன்றாக உள்ளது. எப்படியாவது வெள்ளை பை நிறைய அள்ளிக்கொண்டு வந்துவிடு. ஊருக்கு எடுத்துச் சென்று விதைப்போம். அறுவடை முடிந்ததும் நாம் நாளும் அந்தச் சோளத்தை சாப்பிட்டுக்கொண்டிருப்போம்.” என்றான். “நமக்குள்ளேயே சண்டையிட்டுக் கொள்ளாது இருப்போம்” என்றாள் வள்ளி.

இருவரும் வீடு திரும்பும் வேளை வந்தது. வறுத்த சோளத்தை எடுத்துக் கொண்டு தங்கள் ஊரை அடைந்தார்கள். விதை விதைக்க வேண்டிய நேரமும் வந்தது. வறுத்த சோளம் விளையாது என்று அவனோ, அவளோ எண்ணிப்பார்க்காது விட்டார்கள். ஆகவே வீட்டுக்கு அருகே வெள்ளம் தேங்கி நிற்கக்கூடிய பள்ளத் தரைமீது சோளத்தை விதைத்தார்கள். சோளம் முளைத்து ஒன்றுக்கு நூறாக விளையும் என்று பிள்ளைகள் காத்திருந்தார்கள். அடிக்கடி உள்ளே போவதும், வெளியே வருவதுமாக வேளாவேளையும் கவனித்தார்கள். விதைப்பு அவர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

வள்ளுவன், வள்ளி செய்கையைக் கண்டு இவர்கள் இருவரும் முட்டாள்கள் என்று அக்கம்பக்கத்தார் உள்ளுக்குள் நினைத்துச் சிரித்தார்கள்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |